இஸ்லாம் மறுமண நெறிமுறைகள் • மரண தண்டனையும் இந்திய சட்டங்களும் • ALTERNATIVE DISPUTE RESOLUTION

Rs.25/-

# லாயர்ஸ் லைன்

Vol: III - Issue: 28 - March: 2014 www.lawyersline.net



ISSN 2321-8770

## ஆண்களின் அந்தரங்கம்

## பலியாகும் மணமகள்கள்...

- நீதிமன்ற தீர்ப்பு



## மூவர் தூக்கு

லாயர்ஸ் லைன் சர்வே...

பகீர் முடிவுகள்



## பத்திரங்கள் தொலைந்துவிட்டால் ?



## மகேஸ்வரி கொலை...

சாப்ட்வேட் நிறுவனங்களின்

கோரமுகம்...

நினைத்துக் கொண்டுவிட்டால் மட்டும் அதில் நீர் நிரப்பிக் கொண்டுவர இயலுமா? முடியாதல்லவா, அதே போல்தான் இப்பிரபஞ்சம் பொய்யாக இருந்தால் உலக வியவகாரங்கள் நடைபெறுமா? நடைபெறாதல்லவா. ஆகவே இப்போது நடைபெறுகின்ற உலக வியவகாரங்கள் உண்மையே என்பது எனது முடிவு. (பருமன், மெலிவு போன்ற உடலியல்புகள் ஆன்மாவிற்கு இல்லை என்பது சரியானதல்ல) அடுப்பில் ஏற்பட்ட பாத்திரம் அங்குள்ள தீயினால் சூயேறுகிறது. அதனால் அந்த பாத்திரத்திலுள்ள தண்ணீர் சூடாகி கொதித்து அந்த வெப்பத்தால் அதிலுள்ள அரிசி வெந்து பக்குவ மடைகிறது. அதே போல் தான் ஜீவனுக்கும் தேகம், இந்திரியங் கள், பிராணன், மமை – இவைகளில் தொடர்பு ஏற்படுவ தால் அவைகளுக்குள்ள தாபம், சிரமம் முதலிய அனு பவங்கள் ஏற்படுகின்றன.

தண்டனை தருவதால் ஒரு பயனுமில்லை என்று தாங்கள் கூறினீர் அல்லவா? அரசன் என்பவன் மக்களை அடக்கி ஆண்டு காப்பாற்றுவதற்காக பகவானால் நியமிக் கப்பட்ட ஒரு பணியாள் அதனால் அவன் திமிர்பிடித்து பணியானைத் தண்டிப்பது அரைத்த மாவினை அரைப் பது போல் வீணாகாது. ஏனெனில், தமது கடமையைத் தவறாது செய்வதே பகவானது சேவையாகும். அவ்வாறு செய்பவன் தனது அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுகின்றான். அதனால் தனது பாவங்களை விலக்கிக் கொள்கின்றான். நான் அரசன் என்கின்ற செருக்கினால் மதியிழந்து தங்களை போன்ற மகாத்மாவை அவமதித்துவிட்டேன். எனவே, சான்றோர்களை அவமதித்த இந்த பெரும் பாவத்திலிருந்து நான் விடு தலைப் பெறுமாறு என் மேல் கருணை பொழியும் பார்வை செலுத்த வேண்டுகிறேன். நோக்கு பார்வை ஒருவரின் வாழ்வை சிறப்படைய வைக்கும். (பெரியோர்கள் கருணை யோடு நம்மை நோக்கினால் நமது பாவங்களனைத்தும் தீயினில் தூசாகும் என்பது கருத்து) உண்மையை அறிய கண்ணை பார்த்து தான் பேச வேண்டும். கண் அனைத்தையும் காட்டிக் கொடுக்கும் மகாசக்தி தங்களுக்கோ இந்த உடற்பற்று கிடையாது. உலக உயிர்கள் அனைத்தையும் ஒரே மாதிரி காண்பவர் மானமோ, அவ மானமோ அதனால் ஏற்படும் மாறுதலோ தங்களிடம் தீண்டாது. மேலும், சிந்து தேச மன்னன் ராஜுகணனுக்கு ஜட பரதர் ஞான உபதேசம் செய்தல் அடுத்த இதழில்... ■


**லாயர்ஸ் லைன்**

**இலவச சட்ட உதவி மையம்**

**FREE LEGAL ASSISTANT**

லாயர்ஸ் லைன் இதழின் சட்ட வல்லுநர்கள் குழு பொதுமக்களுக்கு சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு இலவசமாக சட்ட உதவி அளித்து வருகிறது. சட்ட உதவி வேண்டுவோர் கீழ்கண்ட தொலைபேசியிலோ, அல்லது முகவரிக்கோ நேரில் தொடர்பு கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

லாயர்ஸ் லைன்
இலவச சட்ட உதவி மையம்
PHONE: 9841607006/9444047006
72/3, Anand Appartments, Ground Floor,
100 Feet Road, Vadapalani, Chennai -26.


# மூலப் பத்திர ஆவணங்கள்




R.கிருஷ்ணமூர்த்தி
M.A(police administration). B.L


ஒரு சொத்தை வாங்கி அதை பதிவு செய்து உண்மையான ஆவணங்கள் (Original Documents) வைத்து இருப்பார்கள். அவ்வாறு உண்மையான ஆவணங்களை வைத்திருக்கும் பட்சத்தில் இயற்கை சீற்றங்களிலோ அதாவது தீயினால் எரிந்தோ (அ) செல்லரித்தோ (அ) ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடங்களுக்கு இருப்பிடத்தை மாற்றும் போதோ (அ) மூதாதையர்கள் உண்மையான ஆவணங்களை (Original Documents) (அ) மூல பத்திரங்களை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று தெரியாமல் போகும் போதோ சார் – பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து ஆவணத்தின் நகலைப் பெற்றுக் கொள்ளலாம்.

சார் – பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் ஆவணங்கள் அனைத்தும் பத்திரமாக பாதுகாக்கப் படுகின்றன. இப்படி பாதுகாக்கப்படும் பல ஆவணங்கள் செல்லரித்தும், கிழிந்தும் காணப்படும். ஒரு சில ஆவணங்கள் சார்–பதிவாளர் அலுவலகத்தில் கூட கிடைப்பதில்லை. ஏனென்றால் மேற்குறிப்பிட்ட காரணங்களிலோ (அ) 1984–ம் வருடம் வாக்கில் எல்லாம் தமிழ்நாட்டில் எந்த சார்–பதிவாளர் அலுவலகத்திலும் நம்முடைய நிலத்தின் பரிமாற்றம் செய்யும் ஆவணங்களை பதிவு செய்யலாம் என சட்டம் இருந்தது. அப்பொழுது தமிழ்நாட்டில் கடைக்கோடியில் ஏதோ ஒரு கிராமத்தில் இருப்பவர்கள் கூட சென்னையில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகத் திலாவது தாங்களுடைய பரிமாற்றம் செய்யும் சொத்தின் பத்திர பதிவுகளை பதிவு செய்யலாம் என சட்டம் இருந்தது.

இவ்வாறு பதிவு செய்யும் ஆவணங்களின் விவரங்களை நிலம் (அ) சொத்து எந்த சார்–பதிவாளர் எல்லைக்கு உட்பட்டுள்ளதோ அந்த சார்–பதிவாளர் அலுவலகத்துக்கு பதிவு செய்துள்ள சார்பதிவாளர் அலுவலகம் அறிக்கையை அனுப்ப வேண்டும். அவ்வாறு அறிக்கைகள் அனுப்பவில்லை என்றால் வில்லாங்க சான்றிதழ்கள் தற்போது போடும் போது, பதிவு செய்துள்ள ஆவணங்களின் விவரங்கள் வில்லங்க சான்றிதழ்களில் வராது. அதோடு மட்டு மல்லாமல், பதிவு செய்துள்ள ஆவணங்களை தொலைத்துவிட்டால் ஆவணத்தின் நகல் கூட

# ங்கள் உண்மையான
# T (ORIGINAL DOCUMENTS)
## - தொலைந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்

நமக்கு கிடைக்காது. அது மட்டுமல்ல. நம்மிடம் எந்த ஆவணமும் இருக்காது. விற்பனைச் செய்யும் பொழுது கடினமாக இருக்கும்.

நம்முடைய மூதாதையர்கள் சம்பாதித்த சொத்துக்களின் ஆவணங்களோ (அ) மூலப் பத்திரங்களையோ (அ) நாம் சம்பாதித்த சொத்துக்களின் உண்மையான ஆவணங்கள் (Original Documents ) தொலைத்துவிட்டால் என்ன சட்டத்தின் மூலம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

நம்முடைய சொத்துக்களை விற்க வேண்டிய கட்டாயம் வந்து அதை விற்க போகும் போது உண்மையான ஆவணங்கள் (Original Documents) (அ) மூலப் பத்திரங்கள் தொலைத்துவிட்டோம் என்று சொத்தின் உரிமையாளர்கள் சொன்னால் சொத்தை வாங்க வருபவர்கள் யோசிப்பார்கள். ஏன் யோசிப்பார்கள் என்று கேட்டால் சிலர் உண்மையான ஆவணங்களை வைத்து கடன் வாங்கியிருப்பார்கள். வாங்கிய கடனை பைசல் செய்யவில்லையென்றால், உண்மையான ஆவணங்களை கொடுக்கமாட்டார்கள். இந்த மாதிரியான நேரங்களில் ஒரு சொத்தை வாங்கினால் அது பல பிரச்சனைகளை கொண்டு வரும். இதனால், சொத்தை வாங்க வருபவர்கள் பயப்படுவார்கள்.

இவ்வாறு உண்மையான ஆவணங்களை தொலைத்துவிட்டாலோ, கிழித்துவிட்டாலோ (அ) தீயில் கருகி சாம்பல் ஆகிவிட்டாலோ, என்ன செய்வது என்பது தெரியாமல் தவிப்பவர்களுக்கு சட்டத்தில் ஏதாவது வழி உண்டா என்றால் உண்டு.

உண்மையான ஆவணங்களை பேருந்தில் செல்லும் போதோ, சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லும் போதோ, செல்லரித்துவிட்டாலோ, ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு குடிபோகும் போதோ மறந்து எங்கையாவது வைத்துவிட்டாலோ தேடியும், உண்மையான ஆவணங்கள் (Original Documents) (அ) மூலப் பத்திரங்கள் கிடைக்கவில்லையென்றால் உடனடியாக காவல் நிலையத்தில் எங்களுடைய உண்மையான ஆவணங்கள் (Original Documents) (அ) மூலப் பத்திரங்கள் இந்த இடத்தில் தொலைந்துவிட்டது என்று புகார் கொடுக்க வேண்டும். காவல் துறையினர் புகாரின் அடிப்படையில் விசாரணை செய்தும், தேடியும் கிடைக்கவில்லையென்றால், ஒரு அறிக்கை (Report) கொடுப்பார்கள். இந்த Reportயையும்,



பொது அறிவிப்பு (Paper Publication) நாளிதழ்களில் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும் பொது அறிவிப்பில் (Paper Publication - யில்) தொலைந்துப் போன ஆவணத்தின் நகலை வைத்துக் கொண்டு தொலைந்துப் போன ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆண்டின் விவரத்தையும், ஆவணத்தின் எண்ணையும் பக்கங்கள் விவரங்களையும் மற்றும் எந்த தேசியில் தொலைந்து போன ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்பதையும் சார்பதிவாளர் அலுவலகம் பெயர், சொத்து இருக்கும் இடத்தையும், சொத்தின் சர்வே எண் போன்ற விவரங்கள் எல்லாம் பொது அறிவிப்பில் (Paper Publication) யில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

இந்த பொது அறிவிப்பு (Paper Publication) கண்ட 7 நாட்களுக்குள்ளாக தொலைந்துப் போன ஆவணத்தை யாராவது வைத்திருந்தாலோ (அ) இந்த ஆவணத்தின் மூலம் ஏதாவது கடன் வாங்கியிருந்தாலோ (அ) இந்த ஆவணத்தின் மீது யாருக்காவது ஆட்சேபனை இருந்தாலோ, ஏதுவாக இருந்தாலும் மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு மேல் குறிப்பிட்ட நாட்களுக்குள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லையென்றால் அதன் பிறகு வரும் புகார்களையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தெளிவாக பொது அறிவிப்பில் (Paper Publication) யில் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு நம்முடைய சொத்தையோ (அ) நம் மூதாதையர்கள் சொத்துக்களையோ விற்க போகும் போது தொலைந்துபோன ஆவணத்தின் நகலையும், காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நகலையும், காவல் துறையின் அறிக்கையும் நாளிதழ்களில் வெளியிட்ட அறிவிப்பு நகலையும் சொத்தை வாங்க வருபவரிடம் கொடுத்தால் சொத்தை வாங்க வருபவரும் சொத்தின் உரிமையாளர் சொல்வதெல்லாம் உண்மை தான் என நம்பி சொத்தை வாங்குவார்கள்.

அப்பொழுதுதான் சொத்தை விற்பவருக்கும், வாங்குபவருக்கும் எந்த பிரச்சனையும் வராமல் இருக்கும். ■